(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் மாணிக்கம் என்ற விசாரணைக் கைதி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் அது பற்றி கொடுத்திருக்கிறீர்கள் ; அதை இலாககாவிற்கு அனுப்பி விட்டேன். அங்கிருந்து பதில் வந்தால் நாளைக்கேகூட எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு). உடனடியாக விவாதிக்க முடியாது. பதில் வந்தபிறகுதான் எடுத்துக்கொள்ள முடியும்.

(இ) உறுப்பினர்கள் விடுதி வராண்டாவில் வெளியார் படுப்பது.

திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் இரவு நேரங்களில் வராண்டாவில் அதிகமாகப் படுக்கிறார்கள். வராண்டாவிலேயே சிறுநீர் கழிக்கிறார்கள் ; மலம் கழிக்கிறார்கள். அதுபற்றிப் பலமுறை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இராத்திரி நேரத்தில் அறைக்குள் வந்து தங்குவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், வராண்டாவில், யாரும் படுக்கக் கூடாது என்று உத்தரவு போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை. ஆனால், உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்? மற்றவர்களைக் கண்டிக்கலாம். ஆனால், உங்களையெல்லாம் கண்டித்துவிட்டு நான் எங்கே போவது? இப்பொழுதுள்ள சூழ்நிலையில் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருந்தாலொழிய ஒன்றும் செய்ய முடியாது. ஆகவேதான், நீங்கள்தான் உங்களுக்குள்ளே கலந்து பேசி நல்ல முடிவுக்கு வர வேண்டுமே தவிர, வராண்டாவில் படுக்கிறார்கள் என்று சொன்னால் நான் என்ன செய்வது? உறுப்பினர்களுக்கு வேண்டியவர்கள்தான் அப்படிப் படுக்கிறார்கள். எந்த உறுப்பினருக்கு அவர்கள் வேண்டியவர்கள் என்று நான் பார்க்க முடியாது. ஆகவே, இதில் உறுப்பினர்களின் ஒத்துழைப்புதான் கோரப்படுகிறது.